S.T.C. 44 / 22
P.W..1
**வெங்கட்ராமன்**
Date 14.8.2023

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(எதிரி ஆஜர்)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1)** நான் ஆரம்பத்தில் ரத்னா பயர்ஒர்க்சில் 2014 ம் வருடம் வரை வேலை பார்த்தேன். என் குடும்பத்தில் மொத்தம் நான்கு நபர்கள். என்மனைவி குடும்ப தலைவி ஆவார். இரண்டு மகன்கள் உள்ளார்கள். என் மூத்த மகன் 2019 ம் வருடம் பல்மருத்துவப்படிப்பு படித்து முடித்தார். இரண்டாவது மகன் 2020 ல் பிகாம் படித்து முடித்து விட்டு தற்சமயம் வங்கி தேர்வுக்கு தயார் செய்து கொண்டிருக்கிறார். 2014 ம் ஆண்டு என் மாத சம்பளம் எவ்வளவு என்றால் ரூ12000/- பிடித்தம் போக சுமார் ரூ10200/- வாங்குவேன். எதிரி எப்போது பணம் கேட்டார் என்றால் 2020 ம்வருடம் 6 வது மாதம் கடைசியில் கேட்டார். நான் எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 17.7.2020 ல் கொடுத்தேன். 17.7.2020 ல் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூ55 லட்சம் பணம் கொடுத்தேன். நான் பணம் கொடுத்த விபரம் என்னை தவிர யாருக்கும் தெரியுமா என்றால் குருநாதன், பாண்டிமுனீஸ்வரன் ஆகியோர்களுக்கு தெரியும். எனக்கு எந்த எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் இந்தியன் வங்கி, யூனியன்வங்கி மற்றும் பேங்க் ஆப்இந்தியா ஆகிய வங்கிகளில் கணக்கு உள்ளது. 2020 கால கட்டத்தில் என் வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருந்திருக்கும் என்றால் வங்கி ஸ்டேட்மண்டை பார்த்தால் தான் தெரியும். மூன்று வங்கிகளில் அதிகபட்ச பணம் எவ்வளவு தொகை வைத்துள்ளேன் என்றால் ரூ25 லட்சம் வரை வைத்துள்ளேன். 17.7.2020 ம் தேதி அன்று ரூ55 லட்சம் பணம் நான் வைத்திருந்ததற்கு எந்த கணக்கும் இல்லை என்றால் சரி தான்.

2) புசாஆ 5 ஆவணத்தில் எதிரிக்கு கைமாற்றுக்கடனாக ரூ53 லட்சம் ஜனவரி மாதம் 2021 ம் ஆண்டு கொடுத்ததாக நான் குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் நான் அன்றைய தேதியில் எந்த பணமும் வாங்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் தொகை எழுதப்பட்ட ஏழு காசோலைகள் மற்றும் நிரப்பப்படாத இரண்டு

காசோலைகளில் கையொப்பம் செய்து கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் பணம் கடன் வாங்கிதருவதாக கூறி தான் என்னிடம் காசோலை கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் ஏற்கனவே பழக்கம் உள்ளது என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் என்னால் ரூ53 லட்சம் கடன் கொடுக்க எனக்கு வசதி வாய்ப்புகள் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் 17.7.2020 ல் எதிரி கடன் வாங்கினார் என்றும், என் முதல் அறிவிப்பில் ஜனவரி மாதம் 2021ம் வருடத்தில் கைமாற்று கடன் ரூ53 லட்சம் வாங்கியதாக தட்டச்சு பிழையின் காரணமாக தவறுதலாக குறிப்பிடப்பட்டு விட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 17.7.2020 என்று கூறுவதற்கும் ஜனவரி மாதம் 2021 என்று கூறுவதற்கும் தட்டச்சு பிழை ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. புசாஆ 8 ல் தான் முதன் முறையாக 17.7.2020ம் தேதி கடன் தொகைக்கு ஆதரவாக பதிவு செய்யப்படாத கடன்பத்திரம் ஒன்றை எதிரி கொடுத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் கடன் பத்திரத்தில் சாட்சிகள் முன்னிலையில் பணம் கொடுக்கப்பட்டதாகவும் சாட்சிகள் பத்திரத்தில் கையெழுத்து செய்ததாகவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3) புசாஆ 10 ஆவணத்தில் கடைசி பேராவில் மேற்படி கடன் தொகைக்கு ஈடாக வங்கி காசோலைகளை தங்களிடம் ஒப்படைத்துள்ளேன் மேற்படி அசல் கடன் தொகையை நான் தங்களுக்கு செலுத்தியவுடன் மேற்படி காசோலைகளை என் வசம் ஒப்படைக்க வேண்டியது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு காசோலைகள் எப்போது எதிரி கொடுத்தார் என்றால் 18.12.2021 ம் தேதி அன்று கொடுத்தார். புசாஆ 10 ஆவணத்தின்படி எத்தனை காசோலைகள் கொடுத்தார் என்றால் சுமார் பத்து காசோலைகள் இருக்கும். எங்கு வைத்து யார் முன்னிலையில் காசோலைகள் கொடுத்தார் என்றால் எதிரியின் மில்லில் சென்று வாங்கினேன். காசோலையில் எதிரி எழுதி நிரப்பி கையெழுத்து செய்து கொடுத்தார். தேதிமட்டும் போடாமல் கொடுத்தார். காசோலையில் தேதியை நான் தான் நிரப்பினேன். புசாஆ 1 சிட்டி யூனியன் வங்கி காசோலையில் வெங்கட்ராமன் என்று என் பெயரை நான் தான் எழுதினேன் என்றால் சரிதான். காசோலையில் தொகை எழுதியதும், கையெழுத்து செய்ததும் எதிரி என்றால் சரிதான். புசாஆ 2 காசோலையில் தொகையை ஆறு லட்சம் என்று ஆங்கிலத்தில் எழுதிய எழுத்துக்கள் மற்றும்

தேதியை எழுதியது நான் தான். ஆனால் தொகையை எண்ணால் எழுதியது எதிரிதான். புசாஆ 2 காசோலையானது For Sarma Tarcham metal trade என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். Sarma Tarcham metal trade கூட்டு நிறுவனமா அல்லது தனி நிறுவனமா என்றால் கூட்டு நிறுவனம் ஆகும். அந்த நிறுவனத்தில் யார் யார்பங்குதாரர்கள் என்றால் தெரியாது. எதிரியின் தம்பி எனக்கு பழக்கம் என்றால் இல்லை. Sarma Tarcham metal trade நிறுவனத்திற்கு நான் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும் இவ்வழக்கில் எதிரியான சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் வழக்கானது மேற்படி காரணத்திற்காகவே தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. புசாஆ 10 ஆவணமானது வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சி நபர்கள்என் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றால் சரிதான். புசாஆ 10 ஆவணத்தில் பாண்டிமுனீஸ்வரன் என்பவர் இரண்டாவது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் அவரின் விலாசம் என்னவென்றால் 63, தாராபுரம், South Street, Sivakasi. புசாஆ 10 ஆவணத்தில் சாட்சிகள் என்று கையால் எழுதப்பட்டுள்ளது தட்டச்சு செய்யப்படவில்லை என்றால் சரிதான். புசாஆ 10 ஆவணம் எதிரியால் எழுதிதரவில்லை என்றும் சாட்சிகள் எனக்கு வேண்டிய நபர் என்பதால் புசாஆ 10 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4) எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணம் யாருடையது என்றால் ரூ35 லட்சம் என்னுடைய பணம் ஆகும். ரூ20 லட்சம் உறவினர்களிடம் இருந்து வாங்கி கொடுத்தேன். என் புகார்மனுவிலும், நிருபண வாக்குமூலத்திலும் ரூ55 லட்சம் என் பணம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் ரூ55 லட்சம் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு ரூ55 லட்சம் கொடுக்க வசதி வாய்ப்பு இல்லை என்பதால் தான் உறவினர்களிடம் இருந்து ரூ20 லட்சம் வாங்கி கொடுத்ததாக தற்சமயம் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி பட்டாசு தயாரிப்பதற்கு தேவையான மூலப்பொருட்களில் ஒன்றான சீவுதூள் உற்பத்தி செய்கிறார் என்றால் சரிதான். எதிரி வியாபாரம் பெரிய அளவில் செய்து வந்தார் என்று தெரியும். நான் வேலை பார்த்து வந்த ரத்னா பயர் ஒரக்ஸ் தொழிற்சாலைக்கு எதிரி அவர் தயாரிக்கும் மூலப்பொருட்களை கொடுத்து வந்தார் என்றால் சரிதான். அந்தவகையில் எதிரிக்கும் எனக்கும் பழக்கம் என்றால் சரிதான். எதிரியின் வியாபாரத்தில் அவருக்கும் அவர் சகோதரருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் தெரியாது. மேற்படி எதிரிக்கும் அவரது சகோதரருக்கும் பிரச்சனை

ஏற்பட்டதால் வியாபாரத்தின் முன்னேற்றத்திற்காக நானாக சென்று எதிரிக்கு என் உறவினர்கள் மூலம் பணம் வாங்கி தருவதாக கூறினேன் என்றால் சரிதான். அதனால் தான் நான் கடன் வாங்கி தருவேன் என்று நம்பிக்கையின் அடிப்படையில் எதிரி சுமார் 11 காசோலைகளில் கையொப்பம் செய்தும், அதில் சில காசோலைகளில் தொகையை மட்டும் குறிப்பிட்டும், இரண்டு நிரப்பப்பட்டாத காசோலைகள் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரியை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் தாவா இரண்டு காசோலைகளை இந்தவழக்கையும் , மற்ற இரண்டு காசோலைகளை வைத்து இதே நீதிமன்றத்தில் எஸ்டிசி 261/2022 என்ற வழக்கும் , என் நண்பரான இசக்கிமுத்து என்பவரை வைத்து எஸ்டிசி 42/2022, எஸ்டிசி204/2022 என்ற இரண்டு வழக்குகளும், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1 ல் என் நண்பரான சுப்புராஜ் என்பவர் மூலம் எஸ்டிசி 43/2022 மற்றும் எஸ்டிசி 156/2022 என்ற வழக்குகளையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த பணமும் எதிரிக்கு கொடுக்கவும் இல்லை எதிரி வாங்கவும் இல்லை என்றால் சரியல்ல. புகாரானது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.